(முற்பகல் 10–50)

(4) கவன ஈர்ப்பு.

(அ) பழவேற்காடு அடுத்த கோட்டைக் குப்பத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 12–2–78-ல் பழவேற்காடு அடுத்த கோட்டைகுப்பத்தில், மீனவர்கள் மத்தியில் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக 8 பேர்கள் படுகாயம் அடைந்தும் படகுகளையும், வலைகளையும் நாசமாக்கி தீக்கிரையிட்டு சொத்துக்களை நாசமாக்கியும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து திருவாளர்கள் ஏ.ஆர். மாரிமுத்து, ப.பொன்னுரங்கம் ஆகியோர் மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, 12–2–78-ல் பழவேற்காடு அடுத்த கோட்டைக் குப்பத்தில், மீனவர்கள் மத்தியில் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக 8 பேர்கள் படுகாயம் அடைந்ததும் படகுகளையும் வலைகளையும் தீக்கிரையிட்டு சொத்துக்களை நாசமாக்கியும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆண்டிக்குப்பம். நடுக்குப்பம், மற்றும் கோட்டைக் குப்பம் மீனவர்கள் செயற்கை நைலான் நூலினுல் செய்யப்பட்ட அடைப்பு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை லைட் அவுஸ் அரிசன காலனி மீனவர்களும், கூனன் குப்பம் மீனவர்களும் ஆட்சேபித்தனர். இதன் தொடர்பாக கூனன் குப்பம் சாத்தான் குப்பம் பகுதியைச் சார்ந்த கடல் மீனவர்கள் நைலான் நூலில் பின்னிய ஆரவலையை பழவேற்காடு ஏரியின் மேற்பகுதியில் பயன்படுத்தி மீன்பிடிக்க பக்கிங்காம் கால்வாயை ஊடுருவிச் செல்வதை ஆண்டி குப்பம், நடுகுப்பம், கோட்டைகுப்பம் மீனவர்கள் ஆட்சேபித்த தால், மேற்கண்ட மீனவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டது.

நான் மேற்கண்ட குப்பத்தின் மீனவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய சமரச கூட்டம் ஒன்றை 24–2–78 அன்று தலைமைச் செயலகத்தில் கூட்டினேன். மீனவத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளும் உடன் இருந்தனர். இருதரப்பு மீனவர்களின் கருத்துக்களைக் கேட்ட பின்னர், மோதல்கள் நிகழ்ந்த பகுதிக்கே சென்று அங்குள்ள நிலைமையை அறிந்து வருமாறு மீன்வளத் துறையினரை கேட்டுக் கொண்டிருக்கிறேன். மேற்குறித்த தகராறுகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும்.